4th November 1958]

THE HON. SRI V. RAMAIAH : கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு சலுகை காட்ட வேண்டுமென்ற அடிப்படையில் தான் அரசாங்கத்தின் உத்தரவு அமைந்திருக்கிறது. ஆனால் யாருக்குஅனுமதி கொடுக்க வேண்டும், யாருக்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அரசாங்கம் சொல்லத் தயாராயில்லை.

SRI K. PERIANNAN : புதிய பஸ் ரூட்டுகளுக்கு அனுமதி கொடுக்கும்போது ஹரிஜனங்களின் மனுக்களுக்கு முதலிடம் அளிக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI V. RAMAIAH : பஸ் தொழிலை வளர்க்கும் போது ஜாதிப் பாகுபாடுகளை இந்தத் தொழிலில் புகுத்த வேண்டுமென்று நான் ஆசைப்படவில்லை. ஹரிஜனங்கள் ஒன்றுகச் சேர்ந்து பஸ் ரூட்டுகளில் கூட்டுறவு முறையில் பஸ்கள் விட முன் வந்தால், அதற்கு அனுமதி அளிக்க புதிய ஜி.ஓ. (சர்க்கார் உத்திரவு) வகைசெய்கிறது.

Foot-wear manufacturing Unit at Salem

MR. SPEAKER : As the hon. Member Sri M. P. Subramaniam is absent, this question and the answer will be printed in the Official Proceedings.

SRI A. GOVINDASAMY : Sir, I put the question on his behalf.

MR. SPEAKER : The hon. Member is late.

* 847 *Q.*—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the proposal to start a foot-wear manufacturing unit at Salem has been dropped; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) No, Sir. The proposal has only been deferred in view of the difficulty experienced in securing the site for locating the unit and in finding a ready market for the products of the Foot-wear Units already started at Perambur, Triplicane, Pallavaram and Erode.

Sheep farm

* 848 *Q.*—SRIMATHI A. S. PONNAMMAL : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

நிலக்கோட்டைத் தாலுகாவில் கணவாய்ப்பட்டி, அணைப்பட்டி ஆகிய பகுதிகளில் செம்மறியாட்டுப் பண்ணை வைத்து நடத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் ஏதேனும் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRIMATHI A. S. PONNAMMAL : கணவாய்ப்பட்டி என்ற இடத்தை ஜில்லா வெடிரினரி அதிகாரி பார்வையிட்டார். அவர், அது ஆடுகள் வளர்ப்பதற்குத் தகுதியான இடம் என்று கூறிச் சென்றார். அப்படி இருக்க, அந்த இடத்தில் ஆட்டுப் பண்ணையை சர்க்கார் ஏன் அமைக்க முடியாது என்று கனம் அமைச்சர் கூறுகிறார்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆட்டுப் பண்ணைகள் அமைப்பதற்குத் தகுந்த நல்ல பிரதேசங்கள் எத்தனையோ இருக்கலாம். ஆனால், இப்போது மூன்று பிரதேசங்களில் மட்டுமே ஆட்டுப் பண்ணை வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால், இன்னுமொரு பண்ணை அமைக்க சர்க்காருக்கு உத்தேசமில்லை.

[4th November 1958

MR. SPEAKER : சீக்கிரமே 10 மணி ஆகப்போகிறது. இன்னும் 5 கேள்விகள் இருக்கின்றன. இனிமேல் ஒவ்வொரு கேள்விக்கும் ஒரே ஒரு உப கேள்வி அனுமதிக்கிறேன். மூலக் கேள்வியைப் போட்டவரை அந்த உப கேள்வியைப் போட அனுமதிக்கிறேன்.

Increase in the yield of paddy through Nathaswaram

* 849 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நாதசுவர வாத்தியத்தின் மூலம் நெல் மகசூலை அதிகரிக்கும் நூதன வழியை கண்டுபிடித்துள்ளதாக சொல்லப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ?

(ஆ) சர்க்காரின் அபிப்பிராயம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The answer is in the negative.

(*b*) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : சிதம்பரத்திலுள்ள கல்லூரியில் இந்த முறை கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இது சர்க்காருக்கு ஏன் தெரியவில்லை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சிதம்பரத்திலுள்ளவர்கள் இந்த ஆராய்ச்சியைச் செய்திருக்கிறார்கள் என்ற செய்தியைப் பத்திரிகையில் கனம் அங்கத்தினர் பார்த்துவிட்டுத்தான், இந்தக் கேள்வியைப் போட்டிருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். பத்திரிகைகளில் வரும் செய்தியை பார்த்துவிட்டு சர்க்கார் நடவடிக்கை எடுக்க முடியாது.

Key Village Centre for Udaiyarpalaiyam

MR. SPEAKER : As the hon. Member Sri K. R. Viswanathan is absent, the question and answer will be printed in the Official Proceedings.

* 850 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to open a Key Village Centre at Udaiyarpalaiyam taluk, Tiruchirappalli district; and

(*b*) the cost of maintaining a Key Village Centre?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Rs. 45,200 non-recurring and Rs. 35,000 recurring.

Godowns for the storage of foodgrains

* 851 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

உணவுத் தான்யங்களைச் சேமித்துவைப்பதற்கான கிடங்குகள் எந்தெந்த இடங்களிலே இருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix VIII on pages 589–594 infra.